**செய்தி வெளியீடு எண்: 620** **நாள்: 04.09.2018**

**மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் எழுதிய ''பரிட்சைக்குப் பயமேன்''**
**நூல் வெளியீட்டு விழாவில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் உரை (4.9.2018)**

* * * *

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு ஆளுநர் அவர்களே!
மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!
மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.ப.தனபால் அவர்களே!
மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் திரு.பொன்.ராதாகிருஷ்ணன் அவர்களே!
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!
மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே!
வருகை தந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே!
மதிப்பிற்குரிய கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஆர்.ராஜகோபால், இ.ஆ.ப., அவர்களே!
மதிப்பிற்குரிய பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களே!
வருகை தந்திருக்கின்ற அனைத்து பதிப்பகத்தின் பிரதிநிதிகளே!
மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற பெரியோர்களே, தாய்மார்களே!
வணக்கத்திற்குரிய ஆசிரியப் பெருமக்களே!
அரசு உயர் அதிகாரிகளே!
அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**''தொட்டணைத்தூறும் மணற்கேணி மாந்தருக்கு**
**கற்றணைத் தூறும் அறிவு''**

என்ற குறளின் மூலம் திருவள்ளுவர் உணர்த்துவது

கற்க கற்க அறிவு வளரும் என்பது தான்.

'கற்றல்' என்பது தாய் முகம் பார்த்து அம்மா என்று

அறிந்துகொள்ளும் குழந்தை பருவத்திலிருந்து

தொடங்குகிறது. அப்போதுதான் தாய்

ஒரு ஆசிரியை அல்லது குரு நிலைக்கு உயர்ந்து

தன்னை சுற்றியிருக்கிற உறவையும்

சூழலையும், தன்னை சுற்றியிருக்கிற பொருள்களையும்

குழந்தைக்கு கற்றுத்தருகிறார். அதன்பிறகு

ஆசிரியர் இந்த உலகத்தை அந்த குழந்தைக்கு

அறிமுகப்படுத்துகிறார். அதனால்தான்

மாதா, பிதா, குரு, தெய்வம் என்கிறார்கள்.

ஒருவன், மாதாவையும், பிதாவையும், குருவையும்

பின்பற்றி வாழ்ந்தால், அவனுக்கு இறைவன் தேடி
வந்து அருள் புரிவார். அவன் இறைவனை
தேடிச்செல்ல வேண்டியதில்லை.
கற்றவன்தான் முழு மனிதனாக
மதிக்கப்படுகிறான். இளமையில் கற்பதுதான் கல்வி.
அதன்பிறகு கற்பது எல்லாம் அறிவும் அனுபவமும் தான்.
அந்த இளமைக்கல்வி தான் எதிர்கால முன்னேற்றத்தை
தீர்மானிக்கிறது.
அதனால்தான் குழந்தைகள் கல்விக்கு அதிக
முக்கியத்துவம் தரவேண்டும்.
குழந்தைகளை உளவியல் ரீதியாக அணுகி
அவர்களுக்கு கற்பிப்பது ஒரு மாபெரும் கலை.
ஒரு மகத்தான, புனிதமான, தெய்வீகமான கலை.
வேரில் நீரூற்றி, உரம் போட்டு உருவாக்குகிற
குழந்தைகளுக்கான கல்வியில் தான் அதிகம்
அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.
ஒரு தாய்க்கு உள்ள பொறுப்பும், கடமையும்,
தியாக உணர்வும், சகிப்புத்தன்மையும்
நிச்சயமாக ஆசிரியர்களுக்கும் அவசியம்
இருக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு
உளவியல் அறிவு அதிகமாக இருக்க வேண்டும்.
அப்படிப்பட்ட ஆசிரியர்களின் முகத்தை
அந்தக் குழந்தைகள் எதிர் காலத்தில்
மறந்து போகலாம். தாங்கள் சீராட்டி, பாராட்டிய
அந்தக் குழந்தைகளை ஆசிரியர்களும்
மறந்து போகலாம். ஆணிவேரும் அஸ்திவாரமும்
கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால்,
அவைகளால் தான் மரங்களும், மாளிகைகளும்
ஓங்கி வளர்ந்திருக்கிறது என்பதை
எல்லோரும் உணர வேண்டும். அந்த ஆணி வேருக்கும்
அஸ்திவாரத்திற்கும் வலிமைதான் அந்தக்
குழந்தையின் எதிர்காலத்தை வலிமை உடையதாக

மாற்றுகிறது. தேர்வு என்ற போர்க்களத்தில் நின்று
போர்புரிகிற வீரர்களாக உருவாக்குகிறது.
அதனால்தான் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்கள்
இந்த நூலுக்கு “Exam Warriors” அதாவது
“பரிட்சைக்கு பயமேன்” என்று பெயர்
வைத்திருக்கிறார்கள். நூலுக்குள் பரந்துகிடக்கின்ற ஆலோசனைகள் அனைத்தும்
மிக இலகுவாக புரிந்துகொள்ளக்கூடிய
அளவிற்கு, மத்திய, மாநில போட்டித்தேர்வுகளை எளிதாக
எதிர்கொள்கின்ற அளவிற்கு, தேர்வை எண்ணி
அஞ்சும்படியான மன அழுத்தத்திலிருந்து
விடுபடுகின்ற அளவிற்கு, எந்தத்தேர்வு
வந்தாலும் நான் எளிதாக எதிர்கொள்வேன்
என்ற மனநிலையை ஒரு மாணவனுக்கு
உருவாக்குகின்ற அளவிற்கு இந்த நூலில்
பல செய்திகள் அடங்கி இருப்பது மிகவும்
பாராட்டுக்குரியதாகும்.
இந்திய நாட்டின் தலைமைப்பொறுப்பை
வகிக்கின்ற ஒரு தலைவருக்கு இப்படிப்பட்ட
ஒரு நூலை எழுதவேண்டிய அவசியம்
ஏன் ஏற்பட்டது என்பதை அவர்களே தன்னுடைய
முன்னுரையில் தெளிவாக எடுத்துரைக்கிறார்கள்.
தேர்வைக்கண்டு அஞ்சும் ஒரு குழந்தையை
ஒரு தாய் எப்படி சமாதானப்படுத்தி, ஊக்கப்படுத்தி
தேர்வுக்கு அனுப்பி வைப்பாளோ, அப்படித்தான்
இந்திய நாட்டின் பிரதமர் இந்திய குழந்தைகள்
அனைவரையும் ஊக்கப்படுத்தி, நெறிப்படுத்தி
தேர்வுக்குத் தயார் படுத்துகிறார். இது
இந்திய குழந்தைகள் மீதும், இந்திய
இளைஞர்கள் மீதும் அவர் வைத்திருக்கும்
அக்கறையைத்தான் வெளிப்படுத்துகின்றன.
இளைஞர் சக்தியை அதிகமாகக் கொண்டது இந்தியா.
அவர்களை சரியான திசைகளில் வழி நடத்தினால்

இந்தியா மிக விரைவில் உலக நாடுகளை வழி நடத்தும் தலைமை நாடாக மாறும் என்பதை இந்த நூலின் வழியாக மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.
ஒரு நாட்டின் எதிர்காலமே ஒரு வகுப்பறையில்தான் உருவாக்கப்படுகிறது.
நாம் அதிகமாக கற்கிறோம், ஆனால் குறைவாக புரிந்துகொள்கிறோம், செயல்படுகிறோம்.
இந்நிலை மாற வேண்டுமானால் இந்நூலில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் அறிவுறுத்தும் மந்திரங்களை நாம் மனதில் ஏற்றிக்கொள்ளவேண்டும்.
தேர்வுக்காக படிக்காமல் வாழ்க்கைக்காக படிக்க வேண்டும். அதுதான் உண்மையான கல்வி என்கிறார் நமது பாரதப் பிரதமர் அவர்கள்.

‘அறிவு அற்றம் காக்கும் கருவி’ என்பார் வள்ளுவர்.
கல்வி என்பது நமக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும்.
பிறகு நம்மை முன்னேற்ற வேண்டும்.
கல்வி என்பது மாணவர்களை அச்சுறுத்துவதாக இருக்கக்கூடாது என்பதை பல இடங்களில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.
காந்த ஊசி எப்போதும் வடக்கு நோக்கி இருப்பது போலவே கற்கும் பருவத்தில் மாணவனின் மனம் கற்றலிலேயே ஒருமுகப்படவேண்டும். நிலையானதாக அமையும் கல்வியைத்தான் மிகச்சிறந்த கல்வியாக கருதவேண்டும்.
கல்வி என்பது ஒருவருக்கு அறிவையும், அனுபவத்தையும் கொடுக்க வேண்டும்.
அது அதிக மதிப்பெண்ணை மட்டுமே தருமேயானால் அதனால் எந்தப்பயனும் இல்லை என்கிறார் நமது பாரதப் பிரதமர் அவர்கள். ஒரு மருத்துவர் மருத்துவக்கல்லூரியில் பெற்ற மதிப்பெண்ணைப்

பார்த்து அவரிடம் மக்கள் சிகிச்சைக்கு செல்வதில்லை.
ஒரு வழக்கறிஞர் சட்டக்கல்லூரியில் பெற்ற
மதிப்பெண்ணைப் பார்த்து நமது பிரச்னைக்கு
தீர்வு காண அவரிடம் செல்வதில்லை.
மதிப்பெண் என்பது வேறு, அறிவு என்பது வேறு.
மதிப்பெண் ஒருவருடைய அறிவுக்கான
அளவுகோல் அல்ல என்று மாண்புமிகு பிரதமர் அவர்கள்
உறுதியாகக் கூறியிருப்பது ஒரு தலைசிறந்த
கல்வி நிபுணருக்கான சிந்தனையாகவே நான் கருதுகிறேன்.

“பயிற்றில் பல கல்வி தந்து இந்தப்பாரை
உயர்த்திடல் வேண்டும்”
என்பதுதான் பிரதமர் அவர்களின் நோக்கம்.

கணிப்பொறிக்கல்வி, விளையாட்டுக்கல்வி,
தொழில்நுட்பக்கல்வி போன்று வாழ்க்கையின்
பாதுகாப்புக்கும், உயர்வுக்கும், வலிமைக்கும்
தேவையான கல்விக்குத்தான் அதிக முக்கியத்துவம்
தருதல் வேண்டும் எனவும் இந்நூல் வலியுறுத்துகிறது.
“சமையல் மோசமானால் நாம் இழப்பது ஒரு நாள்.
அறுவடை மோசமானால் நாம் இழப்பது ஓராண்டு.
ஆனால் கல்வி மோசமானால் நாம் இழப்பதோ
நமது வாழ்க்கை’’ என்பதை நாம் ஒவ்வொருவரும்
புரிந்துகொள்ள வேண்டும்.
ஆரோக்கியமான உடலை பேணும் கலையைக்
கூற வேண்டும். பண்பாட்டையும், ஒழுக்கத்தையும்
மனதில் விதைக்க வேண்டும்.
நேர்மையை நமது இரத்த ஓட்டத்தோடு
கலக்கச்செய்ய வேண்டும்.
அன்பு, அகிம்சை, அமைதி என்ற மூன்றும்
எண்ணத்திலும், செயலிலும் இருக்க வேண்டும்.
இவற்றை, எந்தக் கல்வி தருகிறதோ அந்தக் கல்வி தான்
மிகச்சிறந்த கல்வி என்ற கருத்துகள்

நிரம்பிய இந்த நூல் ஒவ்வொரு மாணவனின் கையிலும், மனதிலும் எப்போதும் இருக்க வேண்டிய ஒரு வாழ்க்கை வழிகாட்டி நூல்.

தேர்வை இன்முகத்தோடு வரவேற்க வேண்டும். அதை ஒரு பண்டிகையைப் போல கொண்டாடி மகிழ வேண்டும். ஒரு பண்டிகைக்காக எப்படியெல்லாம் முன்னேற்பாடுகள், திட்டங்கள் வகுக்கிறோமோ அப்படிதான் தேர்வுக்கும் நாம் தயாராக வேண்டும். மன இறுக்கத்தோடு தேர்வு எழுதினால் உங்களுக்கு தெளிவாகத் தெரிந்த விடைகளைக்கூட எழுதத் தவறி விடுவீர்கள், போன்ற பல தேர்வுத் தத்துவங்கள் மாணவர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்று இந்த நூலின் ஆசிரியர் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு உலகம் முழுவதிலுமிருந்தும் பாராட்டுகள் குவிந்து வருவதை நான் அறிவேன். அதற்கான மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நான் உளமார பாராட்டுகிறேன்.
கல்வி களத்தில் பெற்றோர்களின் பங்கைப்பற்றி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இந்நூலில் அறிவுறுத்தியிருப்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு குழந்தையைப் பற்றி அதிகமாக பெற்றோர்கள் தான் தெரிந்திருப்பார்கள். குழந்தைகள் படிக்கும் பாடத்திற்கும் வாழ்க்கையில் அதன் உபயோகத்திற்கும் உள்ள தொடர்பை பெற்றோர்கள் இயன்ற அளவு குழந்தைகளுக்கு விளக்க முயற்சி செய்ய வேண்டும். குழந்தைகளின் முதல் வழிகாட்டி பெற்றோர்கள்தான். குழந்தைகளின் ஒவ்வொரு வளர்ச்சியையும், பெற்றோர்கள் எப்போதும் உற்று நோக்கிக்கொண்டு இருக்க வேண்டும். கல்வியில் குழந்தைகளின் கனவை நனவாக்க வேண்டிய கடமை ஒவ்வொரு பெற்றோருக்கும் உள்ளது. இப்படிப்பட்ட அரிய கருத்துக்களை மிகத் துல்லியமாக இந்நூலில் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. குழந்தைகளின் கல்விக்கும் தனக்கும் ஏதோ சம்பந்தமே இல்லாததை போல் பெற்றோர்கள் இருக்கக் கூடாது. குழந்தைகளின் புத்தகங்களை பெற்றோர்களும் படிக்க வேண்டும். புத்தகங்களில் உள்ள எல்லா கேள்விகளுக்கும் விடை தெரிந்திருப்பதை விட எல்லா கேள்விகளுக்கும் விடையை எப்படி கண்டுபிடிப்பது என்பதை தெரிந்திருப்பது மிக அவசியம். குழந்தைகள் படிப்பில் போதிய முன்னேற்றம் இல்லையென்றால், அந்த குறையை நீக்க அவர்களுக்கு விளையாட்டுகளில் ஆர்வம் ஏற்படுத்த முயற்சி செய்யலாம். மனதை ஒருநிலைப்படுத்தும் யோகாசனத்தை மேற்கொள்ள வேண்டும். குழந்தைகள் தங்கள் வேலைகளை

தாங்களே கவனித்துக்கொள்ளும் அளவிற்கு பெற்றோர்கள் பயிற்சி கொடுக்க வேண்டும். குழந்தைகளின் மன ஆரோக்கியத்திற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் ஒவ்வொரு பெற்றோரும் வழி காட்ட வேண்டும். **பெற்றோர் முதல் ஆசிரியர், ஆசிரியர் இரண்டாவது பெற்றோர்.** பெற்றோருடைய வாழ்க்கைதான் குழந்தைகளுடைய மிகச்சிறந்த பாடப்புத்தகம். குழந்தைகளோடு அதிக நேரம் செலவிடுங்கள். தேர்வு நேரத்தில் உங்களுடைய பெற்றோர்களின் அரவணைப்பும், ஆதரவும், அண்மையும் மிகமிக அவசியம் போன்ற முத்தான தத்துவங்களை பெற்றோர்களுக்கு ஒரு உளவியல் அறிஞராக மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவுறுத்தியிருப்பது மிகவும் பாராட்டுதலுக்கும் வாழ்த்துகளுக்கும் உரியது. இந்த நூலில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கூறியிருக்கிற அத்தனை கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கொண்டதாக இன்று தமிழ்நாடு கல்வித் துறை விளங்கி வருவதை நான் மகிழ்ச்சியோடும் பெருமையோடும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அசுர வேகத்தில் மாற்றங்களை எதிர்கொண்டு வரும்
கல்விச் சூழலில், உலக நாடுகளோடு போட்டி
போடுகிற அளவிற்கு நம் நாட்டில் கல்வி நிலை
உயர வேண்டும் என்கிற மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின்
எண்ணத்தை நிச்சயம் தமிழ்நாடு கல்வித் துறை நிறைவு
செய்யும் என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன்.

உயர் கல்விக்கு முக்கியத்துவம் தரும் அதே வேளையில் அடிப்படைக் கல்விக்கும் அதிக முக்கியத்துவம் தருகிறது தமிழ்நாடு கல்வித்துறை.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வித்துறையில் செய்த புரட்சிதான், இன்று நாம் கல்வியில் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரி மாநிலமாக சிறந்து விளங்குகிறோம்.

மாணாக்கர்கள் கல்வி கற்பதற்கு அவர்களது குடும்ப பொருளாதார நிலை தடையாக இருக்கக்கூடாது எனக் கருதி மாண்புமிகு அம்மா அவர்களைத் தொடர்ந்து, பள்ளிகளில் அதிக அளவில் மாணாக்கர் சேர்க்கை மற்றும் இடைநிற்றலைக் குறைக்க மாண்புமிகு அம்மாவின் வழியில் மாண்புமிகு அம்மாவின் அரசும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பள்ளிகளில் சேர்ந்து படிப்பது, தேர்வு எழுதுவது சம்பந்தமாக மாணாக்கர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு இடையே நிலவும் மன இறுக்கத்தை குறைக்க பல்வேறு சீர்த்திருத்த நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மாவின் அரசால் எடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- கல்வித்துறைக்கு அதிக அளவு ஒதுக்கீடாக 27 ஆயிரத்து 205 கோடியே 88 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.
- 10, 11 மற்றும் 12 வகுப்பு மாணவர்களுக்கான பொது தேர்வு நடைபெறும் தேதிகளும், பொதுத் தேர்வு முடிவு அறிவிக்கப்படும் தேதிகளும் முன்கூட்டியே அறிவிக்கப்படுகிறது.

- அரசு பொதுத் தேர்வுகளில் அறிவிக்கும் தரமுறை கைவிடப்பட்டுள்ளது
- 11ஆம் வகுப்பிற்கு பொதுதேர்வு முறை அறிமுகப்படுத்தியது.
- மாணவர்களுக்கு தேர்வு முடிவுகள் 2 நிமிடத்தில் குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்படுகிறது.
- மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பு போட்டித் தேர்வுகளுக்காக 412 மையங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.
- புத்தகப் பையின் சுமையை குறைக்க முப்பருவக் கல்வி முறை நடைமுறைப்படுத்தியது

என்று பட்டியலிட்டுக்கொண்டே போகலாம்.

மாண்புமிகு அம்மா அவர்களாலும் மற்றும் மாண்புமிகு அம்மாவின் அரசாலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தொடர் முயற்சியின் பயனாக தொடக்க நிலை வகுப்புகளின் நிகர சேர்க்கை விகிதம் 99.86 ஆகவும், உயர் தொடக்க நிலையில் வகுப்புகளின் நிகர சேர்க்கை விகிதம் 99.22 ஆகவும் உயர்ந்துள்ளது.
இது 100 விழுக்காட்டை விரைவில் எட்டும் என்றும் உறுதி கூறுகின்றேன்.

குழந்தை பிறப்பதற்கு முன் கருவுற்ற தாய்மார்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மருத்துவ உதவி திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்குவது, அந்த குழந்தை பிறந்தவுடன் அம்மா பரிசு பெட்டகம், பிறகு அந்த குழந்தை பள்ளி சேர்ந்து பள்ளியில் இறுதி வகுப்பு படிக்கும் வரை உள்ள அனைத்தும் கட்டணமின்றி வழங்கும் ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது கருவறை முதல் கல்விச்சாலை வரை அனைத்தும் கட்டணமின்றி வழங்கும் ஒரே அரசு மாண்புமிகு அம்மாவின் அரசுதான்.

**குழந்தை பருவம் குதூகலமாய், வண்ணத்து பூச்சிக்களாய் விளையாடி துள்ளி திரியும் காலம். பள்ளி சென்று பயில வேண்டிய காலம், குழந்தைகளின் திறமைகளை கண்டறிந்து, மேம்படுத்தி அவர்களின் உரிமைகளை பாதுகாத்து பராமரிக்க வேண்டியது நமது கடமையாகும்**
என்றார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த கருத்தும் இந்த நூலின் வழியாக மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் அறிவுறுத்தும் கருத்தும் ஒன்றாகவே இருப்பதால், இரண்டு தலைவர்களின் கல்வி சார்ந்த சிந்தனைகள் நம் நாட்டு
குழந்தைகளின் முன்னேற்றத்தை மையமாக வைத்தே இருப்பதை உணர முடிகிறது.

எனவே குழந்தைகளின் மனதை குதூகலமாக வைத்து, அவர்கள் எந்தவிதமான மனஇறுக்கமின்றி மகிழ்ச்சியாக கல்வி கற்று வாழ்வில் உயர்ந்து இந்த நாட்டையும் உயர்த்த மாண்புமிகு அம்மாவின் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என உறுதி கூறுகிறேன்.

“Exam Warriors” என்ற ஆங்கிலத்தில் வெளிவந்த இந்த அரிய நூல் ‘‘பரிட்சைக்கு பயமேன்” என்ற தலைப்பில் தமிழில் சிறப்பாக வெளி வந்துள்ளது. ஆங்கில நூலின் எழுத்து நடையும், தமிழ் நூலின் எழுத்து நடையும் எல்லோரும் புரிந்து கொள்ளுகிற அளவிற்கு எளிமையாக இருக்கிறது. பக்கத்திற்கு பக்கம் இளைஞர்களை, குழந்தைகளை கவர்ந்து இழுக்கும் அளவிற்கு கார்ட்டூன் வண்ணப்படங்களுடன் இந்நூல்

வடிவமைக்கப்பட்டிருப்பது தனிச்சிறப்பாகும். செய்வோம், செய்வதன் மூலம் வளர்வோம் என்ற மைய கருத்துடன் வாழ்க்கை வழிகாட்டி நூலாக உலக இளைஞர்கள் அனைவருக்கும் பொருந்தும் படியான ஒரு சிறந்த நூலை வழங்கியமைக்கு நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை மீண்டும் பாராட்டி மகிழ்கிறேன். இந்நூலை தமிழில் நேர்த்தியாக வெளியிட்டுள்ள “அல்லயன்ஸ் கம்பெனி” பொறுப்பாளர்களையும் பாராட்டுகிறேன்.

வாழ்க அண்ணா நாமம்

வளர்க புரட்சித்தலைவரின் புகழ்

தொடர்க அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி.

நன்றி, வணக்கம்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**